செ.வெ.எண்: 22 நாள்: 14.09.2020

பெரம்பலூர் மாவட்டம்

**தேசிய குடற்புழு நீக்க மாத்திரை 1,70,440 குழந்தைகளுக்கு இரண்டு கட்டமாக வழங்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்.**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப. அவர்கள் தேசிய குடற்புழு நீக்கம் மாத்திரை முதற்கட்டமாக 14.09.2020 முதல் 19.09.2020 வரையிலும், இரண்டாம் கட்டமாக 21.09.2020 முதல் 26.09.2020 வரை வழங்கப்படுவதை முன்னிட்டு, பள்ளிக்கல்வித் துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலரிடம் குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கி இப்பணியினை துவக்கி வைத்தார்.

மேலும் இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

இச்சிறப்பு முகாமில் 1 முதல் 19 வயது வரை உள்ள அனைத்து ஆண், பெண் குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்பட உள்ளது. இம்முகாமானது 443 அங்கன்வாடி மையங்கள், 90 அரசு துணை சுகாதார நிலையம், 29 அரசு ஆரம்ப சுகாதார நிலையம் என 562 இடங்களில் மாத்திரை இலவசமாக வழங்கப்படுகிறது. குடற்புழு நீக்கம் மாத்திரை வழங்கும் பணியில் 90 மருத்துவ அலுவலர்கள், 87 கிராம சுகாதார செவிலியர்கள், 38 சுகாதார ஆய்வாளார்கள், 32 தன்னார்வலர்கள் மற்றும் 443 அங்கன்வாடி பணியாளர்கள் என 690 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இதன்மூலம் குழந்தைகளின் ஆரோக்கியம், மேம்படுவதுடன் ஊட்டச்சத்து குறைபாடு இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்வதற்கும், கல்வித்திறன் அதிகரிக்கவும் உதவுகிறது. குடற்புழு நீக்க மாத்திரை அங்கன்வாடி பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவ அலுவலர்கள், தன்னார்வலர்கள் மூலமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் 1,70,440 குழந்தைகள் பயனடைவார்கள். பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு குடற்புண் நீக்க மாத்திரை வழங்கி ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினர் உருவாக ஒத்துழைத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு. கீதாராணி, மலேரியா தடுப்பு அலுவலர் சுப்பிரமணியன், மாவட்டக் கல்வி அலுவலர்கள் அ.மீனா, அ.குழந்தைராஜன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**